**சரியான விடை Annual Commerce Tentative Key- Mar 2017**

1.(ஈ) நெகிழ்ச்சித் தன்மையற்றது **40x1=40**
2.(அ) உலகளவில் பெரியது
3.(இ) ஒரு நபர் மட்டும் தேவை
4.(இ) சிற்றளவு வியாபாரம்
5.(ஆ) வியாபார இரகசியங்களைக் காக்க இயலும்
6.(அ) ஒப்பந்தத்தால்
7.(இ) 1932 சட்டம
8.(ஆ) விருப்த்தின் பேரில்
9.(இ) நிறுமச் செயல் முறை விதிகளின் மாதிரி
10(இ) அழைப்பு பணத்தை செலுத்தத் தவறுவது
11.(ஆ) ரூ 10
12.(அ) கடனாளர்கள்
13.(ஆ) 15
14.(அ) நிகரலாபத்தில் 11 விழுக்காடு
15.(அ) 15 மாதங்கட்கு மேல் செல்லக் கூடாது
16.(ஆ) நிதிப்பத்திரங்கள்
17.(ஆ) 21
18.(அ) காளை
19.(ஆ) கிராமங்களிலும் நகரங்களிலும்
20.(இ) அரசு நிறுமம்

**கோடிட்ட இடத்தை நிரப்புக**

21. துறைப்படுத்துதல்
22. ஒப்புக்கொண்ட விகிதப்படி
23. வரையறாப் பொறுப்பு
24. 20
25. உறங்கும் / முதலிடும் / உழையா
26. 7
27. செயல்முறைவிதி
28. ஒன்று (1)
29. முகவர்
30. 21
31. குறைவெண்
32. பேரளவு முதல்
33. கடனீட்டு
34. மும்பை
35. இணைந்து பணியாற்றுதல்
36. இராபர்ட் ஓவன்
37. சில்லரை வணிகம்
38. இயக்குநரவை
39. துறைமுறை/ துறைவாரி அமைப்பு
40. நாட்டுடைமையாக்கம்

**ஏதேனும் 10வினாக்களுக்கு விடையளி10X4=40**

**41. தரவரிசை முறைக்கோட்பாடு:** ஆணையுரிமையின் வரிசை உயர்மட்டத்திலுள்ள் உயர் அலுவலரிடமிருந்து கீழ் மட்டத்திலுள்ள தொழிலாளர்வரை படிப்படியாக கீழ்நோக்கி வரவேண்டும். இதற்கு கட்டளை இணைப்பு என்று பெயர்

**42. கர்த்தா:** இந்துக் கூட்டுக் குடும்பத் தலைமை உறுப்பினர் ஆவார்

**43. வரையறாப் பொறுப்பு:** தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறாப் பொறுப்பு. வியாபார கடன்களை அடைக்க போதுமான சொத்துக்கள் தொழிலில் இல்லையெனில் **தனது சொந்த சொத்தை இழக்க நேரிடும்.** கடனீந்தோருக்கு உரிமையாளரின் சொந்த சொத்துக்களை பறிமுதல் செய்யும் உரிமை உண்டு

**44 கூட்டாண்மை (ஏதேனும் இலக்கணம்)** 1932 ஆண்டு இந்திய கூட்டாண்மைச் சட்டத்தின் 4வது பிரிவின்படி எல்லோரும் சேர்ந்தோ அல்லது எல்லோருக்குமாக ஒருவரோ நடத்தும் தொழிலின் இலாபத்தைப் பகிர்ந்துகொள்ள ஒப்புக் கொண்டவர்களிடையே நிலவும் உறவு

**45. வரையறுத்த கூட்டாண்மை:** ஒரு கூட்டாண்மையில் கூட்டாளிகள் பொறுப்பு வரையறுக்க பட்டிருந்தால் அது வரையறுத்த கூட்டாண்மை எனப்படும்.இந்தியாவில் இத்தகைய கூட்டாண்மை உருவாக்க சட்டம் அனுமதி வழங்குவதில்லை. ஆனால் ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் இவ்வகை கூட்டாண்மை அனுமதிக்கப்படுகிறது.

**46. பங்கு முனைமம்:** ஒரு நிறுமத்தின் பங்கொன்றின் வெளியீட்டு விலை முகமதிப்பை விட அதிகமாக இருக்கும். வெளியீட்டு விலைக்கும், குறைவாக உள்ள முகமதிப்பிற்கும் உள்ள வேறுபாடு முனைமம் என்று சொல்லப்படுகிறது. உ-ம் பங்கொன்றின் முக மதிப்பு ரூ10 எனவும் அது ரூ 12 க்கு வெளியிடப்படுவதாக கொண்டால் பங்கு முனைமம் ரூ2 ஆகும்.

**47.குவிவு முன்னுரிமைப் பங்குகள்** போதிய ஆதாயம் ஈட்டாவிடில், பங்காதாயம் வழங்கப்படாது. எனினும் அந்தாண்டில் பங்காதாயம் பெறும் உரிமை இவ்வகைப் பங்குநர்கட்குக் காலாவதி ஆவதில்லை. அவர்கட்குச் செலுத்தப்பெறாத பங்காதாயம் சேர்ந்து நிலுவையில் இருந்துகொண்டேயிருக்கும். இலாபம் ஈட்டும் பின்வரும் ஆண்டுகளில், பிற பங்குநர்கட்குப் பங்காதாயம் வழங்குமுன்னர், குவிப் பங்குநர்கட்கு நிலுவையில் உள்ள முந்தைய ஆண்டுகளின் பங்காதாயத்தை வழங்க வேண்டும். வழங்கப்படாப் பங்காதாயத்தை நிலுவையாகப் பெறும் உரிமை படைத்த பங்குதான் குவி முன்னுரிமைப் பங்கு என்று கூறப்படுகிறது.

**48.பகராள் :** நிறுமக்கூட்டத்தில் கலந்துகொள்ள உறுப்பினரால் நியமிக்கப்படும் ஒரு நபரை குறிக்கும். பகராளை நியமிக்கும் பத்திரத்தையும் கூட பகராள் எனும் சொல் உணர்த்தும்.

**49. சட்டமுறை கூட்டம் :** 1.பொது வரையறு நிறுமத்தில் பங்குநர்களின் முதல் கூட்டமாகும். நிறுமத்தின் வாழ்க்காலத்தில் ஒரு முறை மட்டுமே நடைபெறும் கூட்டம் இது. 2.உரிமம் பெற்று ஆறு மாதத்திற்குள் ஒரு மாதத்திற்கு பின்னர் இக்கூட்டத்தை கூட்ட வேண்டும்.

**50. தகவலறிக்கை:** ஒரு பொது வரையறு நிறுமம் தனது கடனீட்டுப் பத்திரங்களை வாங்குமாறு பொது மக்களுக்கு அழைப்புவிடும் விளம்பரத்திற்கு பெயர் தகவலறிக்கையாகும்.

**51. பட்டியலிடுதல் :** பங்கு மாற்றகங்களின் அலுவல் பட்டியலில் பத்திரங்களைச் சேர்ப்பதே ஆகும். பொது நிறுமங்களுக்கு பட்டியலிடுதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**52. இராக்டேல் முன்னோடிகள்:** இராபர்ட் ஓவன் என்பவர் முதல் கூட்டுறவு இயக்கத்தை 1844ம் ஆண்டு 28 உறுப்பினர்களுடன் இராக்குடேல் என்ற பெயரில் தொடங்கினார். இது முதன்முதலாக தொடங்கப்பட்ட நுகர்வோர் கூட்டுறவு சங்கமாகும். இராபர்ட் ஓவன் கூட்டுறவு இயக்கத்தின் தந்தையாவார்.

**53. ஆதரவுப் பங்காதயம் :** கூட்டுறவு சங்கம் தனது ஆண்டு இலாபத்தை அதன் உறுப்பினர்கள் சங்கத்தை எந்த அளவு பயன்படுத்திக்கொள்கிறாரோ அந்தஅடிப்படையில் மேலூதியமாகவழங்குகிறது.இதற்கு பகிர்வுநிதி என்றுபெயர்.

**54. அரசுத் தொழில்களை எவ்வகையில் உருவாக்கலாம்:** அரசே முதலீடு செய்து புதிய தொழில் நிறுவனங்களை அமைத்து மேலாண்மை செய்யலாம். ஏற்கனவே தனியார் துறையில் இயங்கி வரும் வணிக அமைப்புகளை நாட்டுடைமையாக்கி செயல்படுத்தலாம்.

**55. அரசு நிறுமம்:** ஒரு நிறுமத்தின் செலுத்தப்பட்ட **பங்கு முதலில் 51% மேல்** மைய அரசோ அல்லது மாநில அரசோ வைத்திருப்பது.அரசு நிறுமம் ஆகும். எ.கா பெல், செய்ல், மாருதி உத்யோக் போன்றவை

**ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி :5X8=40**

**56.அமைப்பின் கோட்பாடு (4): 1.நோக்கங்களின்ஒருமை:** அமைப்பின் குறிக்கோள்கள் தெளிவாக முடிவு செய்யப்பட வேண்டும். நோக்கம் இலக்கினை அடையக்கூடியதாக இருக்க வேண்டும். **2.வேலைப்பகிர்வு:** அனைத்து நடவடிக்கைகளையும் திட்டமிட வேண்டும். இதன்மூலம் மொத்த பணிச்சுமை உணரப்படும். இது பகிர்வு செய்யப்பட வேண்டும். இதுவே துறைப்படுத்தல் ஆகும். **3. கட்டுப்பாட்டு வீச்செல்லை :** ஒரு அதிகாரி எத்தனை கீழ்பணியாளர்களை சீரிய முறையில் நிர்வகிக்க முடியும் என்ற எல்லையே கட்டுப்பாட்டு வீச்செல்லை எனப்படும். ஓர் உயர் அலுவலர் தனக்கு கீழ் உத்தம எண்ணிக்கையில் கீழ்பணியாளர்களை மேற்பார்வை செய்வதே அமைப்பின் திறனை மேம்படுத்தும். **4. தரவரிசைக் கோட்பாடு :** ஆணையுரிமையின் வரிசை உயர்மட்டத்திலுள்ள உயர் அலுவலரிடமிருந்து கீழ் மட்டத்திலுள்ள தொழிலாளர்கள் வரை படிப்படியாக கீழ் நோக்கி வர வேண்டும். இது ”கட்டளை இணைப்பு” என்றும் அழைக்கப்படும். **5. கட்டளையொருமை :** ஒரு பணியாளர் ஒரு அதிகாரியிடமிருந்தே ஆணைகளை பெறும் வகையில் அமைப்பு இருக்க வேண்டும். இரண்டு அதிகாரிகளின் கீழ் ஒருவர் பணியாற்றும் நிலை எழுந்தால் யாருடைய ஆணையை நிறைவேற்றுவது என குழப்பம் ஏற்படும், இதன் விளைவாக குழப்பமும், ஒழுங்கின்மையும் ஏற்பட வாய்ப்பு அதிகம். **6. பணி வழி வரைவிலக்கணம் :** ஒரு பணியாளரின் ஆணையுரிமையும் பொறுப்பும் தெளிவாக வரையறுக்கப்படுதல் அவசியம். ஒவ்வொரு பணியாளருக்கும் இடையே உள்ள தொடர்புகள் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். **7. ஒருமுனை இயக்கம்**

: ஒவ்வொரு குழு நடவடிக்கைகளின், தொகுதியின் நோக்கங்கள் வெற்றியடைய ஒரு தலைமையும் ஒரு திட்டமிடுதலும் இருக்க வேண்டும். அமைப்பின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கவும், பணிகளை நிறைவேற்றவும் இது அவசியம். **8. ஒருங்கிணைத்தல்** : விரும்பும் இலக்கினை அடைய நிறுவனத்தின் பல்வேறு நடவடிக்கைகளும் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு துறையும் மற்ற துறைகளுடன் அடிக்கடி கலந்து ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டும். இலாபம் அதிகரிக்க கொள்முதல் துறையும், விற்பனைத் துறையும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். **9. அதிகார ஒப்படைவு** : ஓர் உயர் அதிகாரி தனக்கு கீழ் உள்ள பணியாளரிடம் சில பணிகளை ஒப்படைக்கிறார். இதை நிறைவேற்ற தேவையான அதிகாரங்களையும், உரிமைகளையும் வழங்க வேண்டும். கீழ் பணியாளர் தனது மேலதிகாரிக்கு பொறுப்பாகிறார்.**10. பொறுப்பு கோட்பாடு** : ஒரு மேலதிகாரி தனக்குக் கீழ்பணியாற்றும் பணியாளர்களின் செயல்களுக்கு பொறுப்பாகிறார். அலுவலர் தனது மேலதிகாரிக்குப் பொறுப்பாகிறார். **11. நெகிழ்வுத்தன்மை** : மாறும் சூழ்நிலைக்கேற்ப அமைப்பும் மாறக்கூடிய வகையில் இருக்க வேண்டும். சீர்குலைவு ஏதுமின்றி விரிவுபடுத்தக்கூடிய வகையில் அமைப்பு இருத்தல் வேண்டும். இதுவே நெகிழ்வுத்தன்மையாகும். **12. திறமை** : அமைப்பின் வெற்றிக்கு திறமையே திறவுகோல். திறமை பயிற்சி மூலம்மேம்படுத்தப்படலாம். குறிக்கோள்களை குறைந்த செலவில் அதிக பலனுடன் நிறைவேற்ற திறமை பயன்படும். **13.தனித்திறமை** : அமைப்பு தனிநபர் திறமை தொடர்பானது. எனவே, பணியாளர் தேர்வு, இட அமர்வு, பயிற்சி அவசியமாகிறது. அமைப்பு மனிதவளத்தை உத்தம அளவில் பயன்படுத்தி வளர்ச்சித்திட்டங்களை ஊக்கமடையச் செய்ய வேண்டும். **14. எளிமை** : அதிகார படிநிலை மட்டங்கள் அதிகமாக இருந்தால் செய்தித் தொடர்புகளில் சிக்கலும், குழப்பமும், மோதலும் ஏற்படும். ஒருங்கிணைப்பு முடியாது போகலாம். எனவே, எளிமையான படிநிலைகள் அமைக்கப்பட வேண்டும்.

**57.கூட்டாண்மை ஒப்பாவணத்தின் உள்ளடக்கம்**

1. நிறுவனத்தின் பெயர் 2. ஒப்பந்த நாள் மற்றும் தொழில் புரியும் இடம் 3. கூட்டாளிகளின் பெயர் மற்றும் முகவரி 4. நிறுவனம் மேற்கொள்ள இருக்கும் தொழிலின் தன்மை 5. கூட்டாண்மையின் காலவரையறை 6. ஒவ்வொரு கூட்டாளியும் வழங்கிய முதல் தொகை 7. ஒவ்வொரு கூட்டாளியும் நிறுவனத்திலிருந்து எடுக்கும் தொகை. 8. இலாப பகிர்வு விகிதம் 9. உழைக்கும் கூட்டாளிகளுக்கு கொடுக்கப்பட வேண்டிய ஊதியம் 10. முதல் மற்றும் எடுப்பு மீது வட்டி 11. கூட்டாளிகள் சேரும்போது விலகும்போது பின்பற்ற வேண்டிய நடைமுறை 12. நிறுவனக்கலைப்பின்போது கணக்குகளை தீர்த்துக் கொள்ளும் வழிமுறை 13. கணக்கு ஏடுகளை பராமரித்தல் மற்றும் தணிக்கை 14. கூட்டாளிகள் நிறுவனத்திற்கு தந்திடும் கடன் மற்றும் முன்பணம் மீதானவட்டி 15. நற்பெயரை மதிப்பிடும் முறை 16. கூட்டாளி தகராறுகளை தீர்க்க நடுவர் தீர்ப்பிற்கு விடும் முறை.

**58.அமைப்புமுறையேட்டின் உள்ளடக்கம் :(4) அ)பெயர்குறித்த உட்பிரிவு** :நிறுமத்தின் பெயர் இதில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

**ஆ)நோக்கம் குறித்த உட்பிரிவு** :நிறுமம் ஈடுபடக்கூடிய நடவடிக்கைகள் அதில் குறிப்பிடப்பட்டிருப்பதால் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த உட்பிரிவாய் கருதப்படுகிறது.

**இ)இடங்குறித்த உட்பிரிவு** :பதிவு அலுவலகம் அமைந்துள்ள மாநிலத்தின் பெயர் இங்கு கொடுக்கப்பட்டிருக்கும்.

**ஈ)பொறுப்பு குறித்த உட்பிரிவு** : இப்பிரிவில் தான் உறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. பொறுப்புறுதி நிறுமமாயின் கலைப்பின் போது போதிய சொத்துக்கள் இல்லாதநிலையில் உறுப்பினர் கொண்டுவரும் தொகை குறிப்பிடப்படும்.

**உ)முதல் குறித்த உட்பிரிவு** :நிறுமத்தின் பங்குகளின் வகைகளும் அதன் முதலின் விவரங்களும் கொடுக்கப்படும்.

**59. பங்குகளை வட்டத்தில் வெளியிட நிபந்தனைகள்:**

1. வட்டத்திற்கு வெளியிடவுள்ள பங்குகள் முன்னரே வெளியிட்ட பங்கு வகையை சார்ந்ததாக இருக்க வேண்டும்.
2. சாதாரண தீர்மானத்தின் மூலம் இதற்கு அதிகாரம் தந்திருக்க வேண்டும்.
3. உயர்ந்தளவு தள்ளுபடி பங்கு ஒன்றின் முக மதிப்பில் 10 விழுக்காடுக்கு இது மிகக் கூடாது.
4. நிறுமம் தொழில் தொடங்கிய நாளிலிருந்து குறைந்தது ஓராண்டாவது சென்றிருக்க வேண்டும்.
5. இதற்கு மைய அரசின் ஒப்புதல் பெற வேண்டும்.
6. மைய அரசு அனுமதித்த 2 மாதங்களுக்குள் வெளியிட வேண்டும்.

**60. ஒரு பொது வரையறு நிறுமத்தில் இயக்குநர்கள் எவ்வாறு நியமிக்கப்படுகின்றனர்?** இயக்குநர்கள் வழக்கமாக நிறும செயல்முறை விதிகளில் பெயர் குறிப்பிட்டு நியமனம் பெறுவர். இல்லையெனில், அமைப்பு முறை ஏட்டில் கையொப்பமிட்டோர் முதலாம் இயக்குநர்களாகக் கருதப்படுவர்.

**அ. நிறுமம் நியமிக்கும் இயக்குநர்கள்:** ஒவ்வோராண்டும் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பங்குநர்களால் தேர்ந்தெடுக்கப்படுவதன் மூலம் இயக்குநர்கள் நியமனம் பெறுகின்றனர்.

**ஆ. இயக்குநரவை நியமிக்கும் இயக்குநர்கள்** கூடுதல் இயக்குநர்களை இயக்குநரவையே நியமிக்கலாம். தற்காலிகமாக எழும் காலி இடங்களை இயக்குநரவையே நியமித்து நிரப்பலாம். (இறப்பு, பதவி விலகல் போன்ற சூழ்நிலைகளில்) மாற்று இயக்குநர்களையும் இயக்குநர் அவை நியமிக்கலாம்.

**இ. மூன்றாம் தரப்பினர் நியமிக்கும் இயக்குநர்கள்:** செயல்முறை விதிகள் அதிகாரம் வழங்கினால் நிறுமத்திற்கு கடன் வழங்கியிருக்கும் வங்கி அல்லது நிதி நிறுவனங்கள் தங்கள் சார்பில் பிரதிநிதிகளை இயக்குநர்களாக நியமிக்கலாம்.

**ஈ. மைய அரசு நியமிக்கும் இயக்குநர்கள்:** நிறுமச் சட்ட அவை அளித்த ஆணையின் அடிப்படையில் மைய அரசு இயக்குநர்களை நியமிக்கலாம்.

**61.ஊக வணிகர்களின் வகைகள்**

**காளை (தெஜிவாலா)** : பத்திரங்கள் எதிர்காலத்தில் விலையேற்றம் பெறும் என்று எதிர்பார்க்கின்ற ஊக வணிகர் காளை ஊக வணிகர் ஆவர். இவர் எல்லாம் நன்மைக்காகவே என்ற மனப்பான்மை கொண்டவர் **கரடி ஆல்லது மண்டிவாலா:** எதிர்காலத்தில் குறிப்பிட்ட பத்திரங்களின் விலைகள் வீழ்ச்சி அடையும் என்று எண்ணுபவர். ஒரு கரடி ஊக வணிகர் எதிலும் பின்னோக்கிய மனப்பாங்கு கொண்டவர். **கலைமான்**: கலைமான் ஊக வணிகர் முன்னெச்சரிக்கை உடையவர். இவர் **'முனைம வேட்டையாளர்'** என்றும் அழைக்கப்படுகிறார். **முடவாத்து:** தற்போதைய, தம் நடவடிக்கைகளில் உள்ள இடர்ப்பாடுகளைத் தீர்ப்பதில் போராடிக் கொண்டிருக்கின்ற ஒரு கரடி ஊக வணிகரே முட வாத்து என்று அழைக்கப்படுகிறார்.

**62. கூட்டுறவுச்சங்கத்தின் குறைபாடுகள் ஏதேனும் 8:**

**1)திறமையற்ற மேலாண்மை:**கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள உறுப்பினர்கள் அமைப்பை மேலாண்மை செய்யப் போதுமான திறமையும் அனுபவமும் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். மேலாண்மையைத் திறம்படச் செய்ய ஆர்வமில்லாதவர்களாக இருக்கிறார்கள். திறமையுள்ள அனுபவமிக்க நபர்களை பணியில் அமர்த்த இயலாது.**2)வரையறு முதல்**: குறைந்த வளங்கள் உள்ள மனிதர்களால் கூட்டுறவுச் சங்கங்கள வழக்கமாக அமைக்கப்படுகின்றன. ஒரு நபர் ஒரு வாக்கு முறை உறுப்பினர்கள் அதிக முதலீடு செய்வதை தடைசெய்கிறது. இதனால் இவ்வமைப்பு குறைந்த முதலுடன் சிரமப்படுகிறது. **3)தக்க தூண்டுகோல் இல்லாமை:**இலாப நோக்குஇல்லாமையும் குறைந்த பட்ச 9விழுக்காடு பங்காதாயமும் மேலாண்மையின் பொறுப்புக்குறைய காரணமாகிறது. பணியாளர்கள் குறைந்த ஊதியம் பெறுவதால் கடின உழைப்பில் ஆர்வம் காட்டுவதில்லை. **4)ஒற்றுமையின்மை:** சில வேலைகளில் உறுப்பினர்கள் அவர்களுக்குள் ஒற்றுமையாய் இருப்பதில்லை. இதனால் கூட்டுறவு அமைப்பின் வியாபாரம் பாதிக்கப்படுகிறது.

**5)அசைக்க முடியாத மனிதர்களின் அதிகாரம்:** அரசியல் சார்பில்லாத கூட்டுறவுச் சங்கத்தில் சில உறுப்பினர்களின் அரசியல் செல்வாக்கோடு அமைப்பை மேலாண்மை செய்கின்றனர்.இவ்வமைப்பை சொந்த நொத்து போல் சுரண்டும் வாய்ப்பு உண்டு. **6)உரிமையை மாற்ற இயலாமை:** கூட்டுறவுச் சங்கத்தின் பங்குகள் மாற்றியல்பு கொண்டவை அல்ல. சங்கத்திலிருந்து விலக விரும்புவோர் பங்குகளைத் திருப்பிக்கொடுத்து பங்கு முதல் தொகையைத் திரும்பப் பெறலாம். **7)இரகசியம் காவாமை:** கூட்டுறவுச் சங்கத்தின் நடவடிக்கைகள் சங்கக் கூட்டங்களில் விவாதிக்கப்படுகிறது. ஒவ்வொரு உறுப்பினரும் சங்க ஏடுகளை பார்வையிடவும்

சுதந்திரம் உண்டு. செயல்முறை இரகசியங்கள் மறைக்காப்பாக வைத்திருக்க இயலாது. **8)அதிகமான அரசு தலையீடு:** கூட்டுறவு அமைப்பின் தினசரி நடவடிக்கைகள். அரசின் சட்டப்படியும் கட்டுப்பாட்டுக்குட்பட்டும் நடத்தப்படுகின்றன. கூட்டுறவுச் சங்க பதிவாளரிடம் அறிக்கைகளை சமர்பிக்க வேண்டும். **9)கடன் வசதியின்மை:** உறுப்பினர்களுக்கு நுகர்வோர் கூட்டுறவு சங்கத்தில் கடன் வசதியளிப்பதில்லை. சரக்குகளை ரொக்கம் கொடுத்து வாங்க உறுப்பினர்கள் விரும்புவதில்லை. **10)அரசியல் போட்டியாளர்கள்:** இயக்குநர்களும் செயற்குழு உறுப்பினர்களும் பொதுவாக திறமை பொதுஅறிவு நேர்மை இதன் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. அவர்கள் சாதி சமய அரசியல் தொடர்பின் படி தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள்.

| 63. பொதுத்துறை | தனியார்துறை |
|---|---|
| சேவை நோக்கம் இத்துறைக்கு இரட்டை நோக்கங்கள் உள்ளன. பொருளாதார முன்னேற்றத்தை மற்றும் மக்களிடையேபொருளாதார ஏற்றத்தாழ்வு இல்லாத நிலையில் ஏற்படுத்துதல் ஆகியவை | இலாப நோக்கம் மட்டுமே கொண்டுள்ளது. |
| போதிய அளவு மற்றும் வரையறா நிதி. மக்களின் சேமிப்பை வங்கி கடன்பத்திரம் வாயிலாக வெற்றிகரமாக திரட்ட முடியும். | வரையறுக்கப்பட்ட நிதி.நாட்டு மக்களின் சேமிப்பைதிரட்டுவதிலோ வெளிநாட்டிலிருந்தோ உதவி பெறுவது இதற்கு எளிதல்ல. |
| ஒரு சிலரிடம் செல்வமும் வருமானமும்செரிவடைவதை தடுக்க முடியும். | பொருளாதார வலிமை செரிவடைவதை துண்டுகிறது. |
| தனியார் துறையினரால் புறக்கணிக்கப்பட்ட தொழில்களை ஏற்ற நடத்துதல் | தனியார் துறை எப்பொழுதும்அபாயம் குறைவாக உள்ளது மற்றும்லாபம்அதிகமக உள்ள தொழில்களை மட்டுமே நடத்தும் |
| நாட்டின் வழங்களை பாதுகாக்கின்றன. | காடுகள் சுரங்கங்கள் போன்றவற்றைதனியர் துறைதன்சுயநலத்திற்காக சுரண்டுகிறது. |
| பின்தங்கியபகுதிகளில் தொழில்நிறுவனத்தை தொடங்கி அனைத்து பகுதிகளிலும் சமமாக வளர்ச்சிபெறசெய்படுகிறது | பின்தங்கிய பகுதிகளில் தொழில் தொடங்குவதை விரும்புவதில்லை. |
| அடிப்படை தொழில்கள் இராணுத்தை சார்ந்த தொழில்கள் அரசின் கட்ப்பாட்டில் உள்ள பொதுத்துறையில்உள்ளது | நுகர்வோர் பொருள்கள் விவசாயம் போன்றவை தனியார் துறைக்கு நிடப்பட்டுள்ளன. |
| நுகர்வோர்களின் நலனை காப்பது இதன் தலையாய பணியாக உள்ளது.அவர்களுக்கு தரமான பொருட்களையும் பணியினையும் குறைந்த விலையில் பொதுத்துறை வழங்குகிறது. | நுகர்வோர் சுரண்டப்படுகின்றனர். |

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 4X20=80**

**64.அ) பல்வகை தொழில் வடிவமைப்பு:** தனி நபர் நிறுவனங்கள் **1) தனிவணிகம்:** இது பழமையான அமைப்பு. தனிநபர் முதலிட்டு, தன் பட்டறிவு மற்றும் தொழில் திறனை பயன்படுத்தி மேற்கொள்ளும் தொழில். வரும் இலாப நட்டம் முழுதும் அவரையே சாரும். இவரது பொறுப்பு வரையறா பொறுப்பாகும். தொடங்க, முடிவதற்கு சட்டச் சடங்கு ஏதுமில்லை. எல்லாம் அவரே; அவரே எல்லாமும் என்ற கோட்பாட்டின் படி நடைபெறும் அமைப்பாகும்.**2) இந்து கூட்டு குடும்பம்:** இந்து கூட்டுக்குடும்ப வணிக அமைப்பில் இந்தியா தலைசிறந்து விளங்குகிறது. இதில் தந்தை, தாய், மகன், மகள், மகனின் மகன், மகனின் மகள் ஆகியோர் அடங்குவர். அவர்களது சொத்துக்கள் அனைத்தும் கூட்டு சொத்தாகும். இக்குடும்ப வணிகம் குடும்ப தலைவர் மூலம் நடைபெறுகிறது. இவர் கர்த்தா என அழைக்கப்படுகிறார். **3) கூட்டாண்மை:** எல்லோருமோ, எல்லோர் பொருட்டு அவர்களுள் எவருமோ நடத்திவரும் தொழிலின், ஆதாயத்தை பகிர்ந்து கொள்ள உடன்பட்ட நபர்களிடையே நிலவும் உறவு கூட்டாண்மை. உறுப்பினர்கள் குறைந்தது 2 பேர், அதிக அளவு வங்கி தொழிலாயின் 10, பிற தொழிலாயின் 20 பேர் கொண்ட அமைப்பு. உறுப்பினர்கள் கூட்டாளி என அழைக்கப்படுவர். இலாபநட்டங்களை ஒப்புக் கொண்ட விகிதத்தில் பகிர்ந்து கொள்ள வேண்டும். **4)கூட்டு பங்கு நிறுமம்:** நிறுமம் என்பதொரு புனைவு நபர். நிலைபேற்று தொடர்ச்சியுடனும் பொதுமுத்திரையுடனும் சட்டத்தால் உருவாக்கப்பட்டது. நிறும முதல் சம அலகுகளாக பிரிக்கப்பட்டிருக்கும். இது ஒவ்வொன்றும் 'பங்கு' என அழைக்கப்படும். இப்பங்குகளை வைத்திருப்பவர் பங்குநர். . இந்திய நிறும சட்டம் 1956-கீழ் கட்டாயம் பதிவு செய்யப்பட வேண்டும். நிறும மேலாண்மை' பங்குநர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநர்கள் அடங்கிய இயக்குநரவையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**5) கூட்டுறவு அமைப்பு:** கூட்டுறவு என்பது நபர்கள் தாமாகவே அமைத்துக் கொள்ளும் சங்கமாகும். பொதுவாக, உள்ளூரில் ஒரே இடத்தில் வசிப்பவர்கள் பொருளாதார நலன் கருதி ஒன்று சேரும் தன் விருப்ப மன்றமாகும். இதில் எவரும் பேதமின்றி உறுப்பினராகலாம். கூட்டுறவு அமைக்க 25 நபர் தேவை. சேரவும், விலகவும் வற்புறுத்தல் இல்லை. குடியாட்சி முறையில் ஒரு நபர் - ஒரு வாக்கு கொண்ட அமைப்பு. சேவையே இதன் முதன்மை நோக்கம். **6) பன்னாட்டு நிறுமங்கள்:** இவை பல நாடுகளில் இயங்கி வருபவை. இத்தகைய நிறுமங்களின் தொழிற்சாலைகளும், அலுவலக கிளைகளும் ஒரு நாட்டிற்குமேல் இருக்கும். (எ.கா) 1) யூனிலீவர் லிமிடெட்: இது ஒரு பிரிட்டிஷ் நிறுமம். இதன் இந்திய துணை நிறுமம் இந்துஸ்தான் லீவர் லிமிடெட் ஆகும் 2) IBM இது அமெரிக்க நிறுவனம். கம்யூட்டர் துறையில் பல நாடுகளில் கொடிகட்டிபறக்கிறது. 3) கோகோ-கோலா: அமெரிக்க குளிர்பான நிறுவனம் **அரசு நிறுவனங்கள்: (1) துறைமுறை அமைப்பு:** இது அரசின் ஒரு பகுதி. தனி அமைச்சகத்தால் நிர்வாகம் செய்யப்படுகிறது. பொதுத்துறை அமைப்பில் மிகவும் பழமையானதாகும். இது மத்திய அரசாலோ, மாநில அரசாலோ நடத்தப்படுவதாகும். (எ.கா) ரயில்வே, தொலைபேசி, தொலைக்காட்சி **(2) பொதுக் கூட்டுரு:** இது பாராளுமன்ற தனி சட்டம் மூலம் உருவாக்கப்படுவது. இது ஒரு சட்டமுறை கழகமாகும். இச்சட்டமே இதன் நோக்கம், அதிகாரங்கள், பணிகள் ஆகியவற்றை வரையறுக்கிறது. இது அரசின் நிதியுதவி பெறும் சுயாட்சி அமைப்பு இதன் முழு பங்கு முதலும் அரசாங்கத்தால் செலுத்தப்படுகிறது. இதன் நோக்கம் பொது மக்களுக்கு சேவை புரிவதாகும். (எ.கா) இந்திய ரிசர்வ் வங்கி, LIC UTI ஆகியவை **(3) அரசு நிறுமம்:** இந்திய நிறுமச்சட்டம் 1956ன்படி செலுத்திய பங்கு முதலில் 51% பங்குகளை மத்திய அரசோ, மாநில அரசோ அல்லது இரண்டுமோ சேர்ந்து முதலீடு செய்திருந்தால் அது அரசு நிறுமம் ஆகும். அரசு நிறுமங்கள் கலப்பு உரிமை நிறுமங்கள் எனவும் அழைக்கப்படுகிறது.. இதன் பணியாளர்கள் அரசு ஊழியர்கள் அல்லர் (எ.கா.) BHEL மாருதி உத்யோக் நிறுவனம் **(4) வாரிய அமைப்பு:** இந்த அமைப்பின் மேலாண்மை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஒரு குழுவிடம் உள்ளது. இது தனிச்சட்டங்களால் ஒழுங்குபடுத்தப்படுகிறது. (எ.கா.) தமிழ்நாடு மின்சார வாரியம்,

**64.ஆ. ஆ.அரசு தொழில்களின் நோக்கங்கள்** :

**1.பல்வகைஉற்பத்தி செய்ய உதவுவது**: இலாபம் ஈட்டுவதிலேயே குறியாக இருக்கும் தனியார் தொழில் முனைவோர்.லாப வாய்ப்பு மிகுந்த தொழில்களில் மட்டும் முதலீடு செய்ய விரும்புவர்.லாப வாய்ப்புகள் அதிகம் இல்லாத அதே சமயம் நாட்டுக்கு தேவையான தொழிகளின் முதலீடு செய்ய விரும்பமாட்டார்கள்.தனியார் துறை மேற்கொள் அஞ்சும் தொழிகள் முதலீடு செய்ய விரும்பமாட்டார்கள்.

**2.அடிப்படை தொழிகளின் வளர்ச்சி** : பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத தொழில்களை அடிப்படை தொழிகள் எனலாம்.எடுத்துக்காட்டாக இரும்பு எ.்.கு ஆலைகள் வேதிய தொழில்கள் போன்றவை அடிப்படை தொழிகள்ஆகும். இத்தகைய தொழிகள் அரசு தொழில்கள் அரசு தொழில்களாகவே இருப்பதே சால சிறந்தது.

**3.பேரளவு முதலீட்டு நிறுவனங்கள்:**

சிலதொழில் நிறுவனங்களில் பேரளவு முதலீடு செய்ய விரும்பும் மேலும் அந் நிறுவனங்கள் தொழில் உற்பத்தி தொடக்க காலம் நீண்டதாக இருக்கும்' தனியார் தொழில் முனைவோர் கலால் பேரளவு முதலீட்டினை

அளிக்க முடியாது.எடுத்துக்காட்டாக இரயில் கப்பல் கட்டுவது மின்சக்தி ஆகிய தொழிகளுக்க தேவையான பேரளவு முதலீட்டினை தனியார் முதலீட்டினால் அளிக்க முடியாது.

**4.இன்றியமையாத வசதிகளை நல்குவது**: குடிநீர் மின் உற்பத்தி மின்சக்தி எரிவாயு போக்குவரத்து தகவல் தொடர்பு போனடறவை நாடு முழுவதும் அன்றாட தேவைப்படும் இன்றியமையாத வசதிகள் ஆகும் இத் தேவைகள் மிக குறைந்த விலையில் பூர்த்தி செய்ய வேண்டும். எனவே இவ்வசதிகளை செய்து தரும் அமைப்பகள் அரசு தொழிகள் ஆகவே இயங்க வேண்டும்.

**5.முற்றுரிமை நிறுவனங்களை ஏற்படுத்தவது:** ஒரு நாட்டை அயல் நாடுகளின் தக்குதலில் இருந்து காப்பது மிகவும் இன்றியமையாதது ஆகும்.நாட்டின் பாதுகாப்பு சார்ந்த தொழிகள் தனியார் வசம் இருந்தால் ஒரு நெருக்கடி ஏற்படும் பொழுது அவர்கள் அரசுக்கு முழு ஒத்துழைப்பையும் நல்காமல் போகும் நிலை உருவாக வாய்ப்பு உண்டு.அல்லாமலும் அவர்களட நாட்டின்பாதுகாப்பு குறித்த ரகசியங்களை எதிரி நாடுகளுக்கு சொல்லக்கூடிய அபாயமும் இருக்கிறது.

**6.அனைத்து பகுதிகளிலும் சமமாக பொருளாதார வளர்ச்சி பெறுதல்:**தொழில் உற்பத்தி வளர்ச்சியின் நோக்கம் நாட்டிற்கு தேவையான அனைத்து உற்பத்தி தொழில்களை ஏற்படுத்துவதே ஆகும் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் சமச்சிரான முன்னேற்றம் ஏற்பட வேண்டும்.தனியார் துறையினர் லாபம் ஈட்ட வாய்ப்ப உள்ள அவர் நாட்டின் பின்தங்கிய பகுதிகளில் தொழில் நிறுவனங்களை அமைக்கவிரும்பியதில்லை.

**7.இயற்கை வளங்கள் தோன்றி எடுத்தல்:** நாட்டின் இயற்கையாக கிடைக்கும் பொருட்கள் வளங்களை தோன்றி எடுக்கும் தொழிகளில் முதலீடு செய்வதே நட்டத்தை ஏற்று கொள்ள தனியா துறை விரும்புவதில்லை. இந்தியாவில் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கமிசன் புதுத்தோற்று வாய்களை கண்டுபிடிப்பதற்காக பேரளவு தொகைகளை செலவிடுகிறது.

**8.பொருளாதார வலிமை** செரிவடைவதை தடுத்தல்:
உற்பத்தியானது தனியாரிடம் முழுவதுமாக இருந்தால் தங்களுடைய லாபத்தை அதிகரிப்பதற்காக அவர்கள் பொது மக்களையும் நுகர்வோரையும் சுரண்டுவர் தனியார் துறை அவ்வாறு லாப நோக்கோடு செயல்படும் போது அதன் விலைவாக பொருளாதார வலிமை அவற்றிடம் மேலும் செறிவடைவதையும் நாம் அறிவோம்.

**9.நிறைவேலைவாய்பை உறுதிபடுத்துதல் :**
நிறைவேலைவாய்பு பொது உடமை உற்பத்தியினாலே நாடுகள் கூட வேலைவாய்பை பெறுவதில்லை .நாட்டில் உள்ள வழங்கள் நன்கு பயன்படுத்தப் பட்டால்தான் பொருளதாரவளர்ச்சி விரைவாக ஏற்படும்.இதற்கு அரசு பொருளாதார துறை கவனம் செலுத்தி திட்டங்கள் தீட்ட வேண்டும்.

**10.அரசின் வருவாயை பெருக்குதல்:** சில அரசு நிறுவனங்கள் வணிக கொள்கைகளின் அடிப்படையில் செயல்படும்.அந்நிறுவனங்களில் வருவாய் அரசு கருவுலத்தில் சேர்க்கப்படும்.இவ்வாறு அரசின் நிதிநிலைமை மேம்படுத்தப்பட்டு பொருளாதார முக்கிய துவம் வாய்ந்த திட்டங்களை நிறைவேற்ற பயன்படுத்த படுகிறது இது மக்கள் வாழ்க்கை தரம் உயர்த்த உதவும்.கல்வி மருத்தவம் வீடு போன்றவை பொது நல பணிகளுக்கம் இவ்வருவாய்செலவிடப்படுகிறது.

**65.அ) சமுதாயத்தில் தனியாள் வணிகரின் பங்கு** சமுதாயத்தின் தேவைகளை பூர்த்திசெய்வதோடு கீழ்காணும் வகையில் பணியாற்றுகிறது. **1. வேலையில்லா பிரச்சனைக்கு தீர்வு** குறைந்த கல்வியறிவு உடையவர்களுக்கும், கல்வியறிவு அற்றவர்களுக்கும் அவரவர் இடங்களிலேயே வேலையளித்து ஒரளவு வேலையில்லா பிரச்சனையை தீர்க்கிறது **2. முதலீட்டுக்கான வாய்ப்பு** சிறு முதலீட்டாளர்கள் குறைந்த முதலுடன் தொழில் தொடங்க வாய்பளிக்கிறது. முதலீட்டாளர்களின் சேமிப்புகளை உற்பத்திக்கு பயன்படுத்த உதவுகிறது. **3. குறைந்த விலையில் பொருட்களை அளித்தல்** நிர்வாக செலவு குறைவு என்பதால் பொருட்களின் மீதான அதிகபட்ச விலையைவிட குறைவாகவே விற்பனை செய்வர். **4. சிறு உற்பத்தியாளர்களுக்கு உதவுதல்** உள்ளுர் உற்பத்தியாளர்களிடமிருந்து பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுவதால் உள்ளுர் சிறு உற்பத்தியாளர்கள் பயன் பெறுகின்றனர். **5.தரமான பெருட்களை அளித்தல்** தன் வியாபார நன்மதிப்பை காக்க உயர்ந்த தரமான பொருட்களையே விற்பனை செய்கிறார்.விற்ற பொருட்களில் குறையிருப்பின் அதை திரும்ப பெற்று வேறு நல்ல பொருளை திரும்ப தருகிறார். நுகர்வோர் நலனில் அக்கறை கொள்கிறார். **6.தர்ம சிந்தனையுள்ள நடவடிக்கைகள்** தனி வணிகர்கள் தனியாகவோ குழுக்களாகவோ அமைத்து இலவச கண் சிக்சை முகாம், மருத்துவ முகாம், பூங்காக்களை பராமரித்தல், ஏழை மாணவர்களுக்கு இலவச சீருடை நோட்டு புத்தகங்கள், பள்ளிகளுக்கு அறைகலன்கள் வழங்குதல் போன்ற பல சமுதாய பணிகளை மேற்கொள்கிறார்கள்.**7. வருமானம் மற்றும் வளங்களை சமமாக பகிர்ந்து அளித்தல்** பலர் வியாபார உலகில் தனிவணிகராக ஈடுபட வாய்பளித்தால் வருமானம் மற்றும் வளங்களை சமமாக பகிர்ந்தளிக்க உதவுகிறது.

**8. நுகர்வோருக்கு உதவுதல்** நுகர்வோர் வீட்டு வாசலிலேயே பொருட்களை கிடைக்க செய்வதால், நுகர்வோரின் நேரமும், உழைப்பும் மிச்சமாகிறது.

**65.ஆ.கூட்டுறவு அமைப்பின் ஏதேனும் 10 சிறப்பியல்புகள் :** **1.தன்னிச்சையாக சேரும் சங்கம்:** பலர் தன்னிச்சையாக சேர்ந்து உருவாக்கும் அமைப்பே கூட்டுறவுச் சங்கமாகும்.இவ்வமைப்பில் உறுப்பினராக சோருமாறு ஒருவரை கட்டாயபடுத்த முடியாது.ஒரு நபர் எப்போது வேண்டுமானாலும் இச் சங்கத்தில் சேரலாம் விலகலாம். **2.சமத்துவம்:** கூட்டுறவு சங்கத்தில் எல்லா உறுப்பினர்களும் சமம்.எல்லா உறுப்பினர்களுக்கம் சமஉரிமை உண்டு.அதிகமான முதலீடு ஒருவர் அளிக்கும் காரணத்தால் அதிக உரிமை அவருக்கு கிடையாது. **3.வளங்களின் இணைப்பு:** இந்த அமைப்பில் எல்லா உறுப்பினர்களின் சொந்த வளங்களும் ஒருங்கிணைக்கப்படுகிறது.அவர்களட எல்லா உறுப்பிநர்களின் நரனுக்காக இதை பயன்னடுத்தகின்றனர். **4.ஒருமுனைபடுத்திய முயற்சி:** இந்த அமைப்பில் எல்லாத் தனிநபர்களும் இணைந்து பணியாற்றுகின்றனர்.கூட்டுறவு அமைப்பின் முக்கிய கோட்பாடு ஒவ்வொருவரும் அனைவருக்காக அனைவரும் ஒவ்வொருவருக்காக **5.பன்மர் உறுப்பினராதல் :** பன்மர் இணைந்து உருவாக்கும் சங்கம் கூட்டுறவு அமைப்பு.ஒரு அமைப்பை உருவாக்க குறைந்தது 25 நபர்கள் தேவை.அதிக பட்சம் வரையறை இல்லை **6.நிதி :** கூட்டுறவு சங்கத்தின் முதல் சம மதிப்புடைய பங்குகளாக பிரிக்கப்பட்டுள்ளது.இந்தச் சங்கமும் தனது பங்கு முதலை உறுப்பினர்களிடம் திரட்டுகிறது.பங்குகளின் முகமதிப்பு மிகக் குறைவானதாக இருக்கும்.ஒரு நபர் இச் சங்கத்தின் பங்குகளை வாங்குவதன் மூலம் உறுப்பினராகலாம். **7.அரசியல் செல்வாக்கு இல்லை:** கூட்டுறவு சங்கத்தில் அரசியல்வாதி உறுப்பினராகலாம்.ஆனால் அரசியல் அங்கு நுலைவதில்லை.அரசியல் சார்பற்ற அமைப்பாக இச்சங்கம் இயங்குகிறது. **8.பரஸ்பர உதவி:** சங்கத்தில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரும் பரஸ்பர உதவி செய்ய வேண்டும் என்பது கூட்டுறவு அமைப்பின் அடிப்படை தத்துவம் ஒவ்வொரு உறுப்பினரும் தனக்கும் உதவி செய்து கொண்டு பிறருக்கும் உதவ வேண்டும். **9.சட்டமுறை தணிக்கை:** கூட்டுறவு தணிக்கை துறையைச் சார்ந்த அலுவவலர்கள் ஒவ்வொரு ஆண்டும். கூட்டுறவு சங்கத்தை தணிக்கை செய்கின்றனர். **10.ஊக வணிகம் இல்லை:** கூட்டுறவு அமைப்பின் பங்குப் பட்டியல் பதிய உறுப்பினர்களுக்காக எப்போதும் திறந்தே இருக்கும்.ஊக வணிகம் என்பது இவ்வமைப்பில் இல்லை. 11.மக்களாட்சி முறையில் மேலாண்மை 12.சேவையின் தத்துவம் 13.சட்டத் தகைமை 14.உறுப்பினராவதற்க்கு தடையில்லா வாய்ப்பு 15.முதலுக்கு சொற்ப வருவாய் 16.உள்ளுர் உறுப்பினர்கள் 17.மாநிலஅரசு கட்டுப்பாடு 18.உபரிபகிர்வு 19.பதிவு 20.சட்ட உரு 21.பொறுப்பு 22.ரொக்க வியாபாரம் 23.பங்குகளை மாற்ற இயலாமை 24.சட் ஆளுமை 25.முறையான பயிற்சி

**66) அ)கூட்டாண்மை நிறுவனம் கலைக்கப்படும் சூழ்நிலைகள் :** **1.கூட்டாளிகளின் உடன்பாட்டால் (பிரிவு 40):** ஒரு கூட்டாண்மை நிறுவனம் உடன்பாட்டால் உருவாக்கபடுகிறது

கலைக்கப்படுகிறது.அனைத்து கூட்டாளியின் சம்மதத்தின் பெயரில் அல்லது கூட்டாளிகளுக்கிடையே ஏற்படும் உடன்பாட்டால் கூட்டாண்மை நிறுவனம்ட கலைக்கபடலாம்.

**2.கட்டாய கலைப்பு (பிரிவு 41)** அனைத்து கூட்டாளிகளின் நொடிப்பு நிலையோ அல்லது ஒருவர் தவிர மற்ற எல்லா கூட்டாளிகள் நொடிப்பு நிலையோ கூட்டாண்மை நிறுவனம் கட்டாயமாக கலைக்கபடும்.மேலும் செய்து வரும் தொழில் சட்டத்திற்கு புறம்பானதாக இருந்தால் நிறுவனம் கட்டாயமாக கலைக்கபடும்.

**3.சில நிகழ்சிகள் நிகழ்வுறும் போது கலைப்பு (பிரிவு 42):** கூட்டாளியின் இறப்பு கூட்டாளியின் நொடிப்பு குறைந்த காலத்திற்கான கூட்டாண்மை – அந்தக் காலம் முடிந்தவுடனும் குறிப்பிட்ட தொழில் - அந்த தொழில் முடிந்தவுடன்.

**4.அறிவிக்கையால் விருப்பமுறிக் கூட்டாண்மை பிரிவு – 43** :விருப்பமுறிக் கூட்டாண்மையில் ஒரு கூட்டாளி நிறுவனத்தை கலைக்கும் தனது விருப்பத்தை அறிவிக்கை மூலம் கொடுத்தால்' நிறுவனம் கலைவுறும்.

**5.நீதி மன்றத்தால் பிரிவு - 44:**கூட்டாளி எவரேனும் ஒருவர் கீழ்காணும் காரணங்களுக்காக வழக்கு தொடர்வதன் மூலம் நிறுவனத்தை கலைக்க நிதிமன்றம் ஆணையை பிறப்பிக்கலாம். **(1)கூட்டாளி ஒருவரின் பித்த நிலை** :கூட்டாளி ஒருவரின் பித்த நிலையை அடைந்தால் நீதி மன்றம் கலைப்பதற்கான ஆணையை பிறப்பிக்கலாம். **(2)நிலையான திறமை இன்மை** :கூட்டாளி ஒருவர் நிரந்தரமாக தொழில் செய்யும் திறமையை இழந்திருந்தால் **(3)கூட்டாளியின் தீய நடத்தை** :கூட்டாளி ஒருவர் ஒழுக்கக் கேடான குற்றத்தை செய்திருப்பின் **(4)உரிமை மாற்றம்** :கூட்டாளி ஒருவர் தனது உரிமை நலனை பிறருக்கு மாற்றி கொடுத்தால் **(5)தொடர்ந்து உடன்பாட்டை மீறுகை** :கூட்டாண்மை உடன்பாட்டை ஒரு கூட்டாளி தொடர்ந்து மீறிக்கொண்டிருந்தால் **(6)தொடர் நட்டம்** :கூட்டாண்மை நிறுவனத்தில் தொடர்ந்து நட்டம் ஏற்பட்டால் கலைக்க நேரிடும்.

**66.ஆ செபின் நோக்கம் இயல்பு பணிகள் அதிகாரம்**

**நோக்கம் :** 1.முதலீட்டாளர்களின் நலநனை பாதுகாத்தல் 2.பத்திரச்சந்தை நடவடிக்கைகளை ஊக்கப்படுத்துதல். அபிவிருத்தி மற்றும் ஒழுங்குபடுத்துதல் அதனை சார்ந்த நடவடிக்கைகளியின் ஈடுபடுதல்.1992 ல் வாரியமாக செபி ஏற்படுத்தப்பட்ட போது அடைதரகர்களின் செயல்கள் நடவடிக்கைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துதல் உள்வணிகத்தை தடைசெய்தல் பங்குகளின் ஏலத்தை நடைமுறைக்கோட்பாடுகள் உருவாக்கி நாணயமாக நடக்கச் செய்தல் ஆகிய பணி இதற்கு இருந்தது. **இயல்புகள்:**
1.செபிச்சட்டத்தின் படி ஏற்படுத்தப்பட்ட நீடித்த வாழ்வு மற்றும் பொது முத்திரை கொண்ட ஒரு கூட்டுருவாக்கம் ஆகும்.
2.செபின் தலைமை அலுவலகம் மும்பையில் உள்ள கிளை அலுவலகங்கள் இந்தியாவில் மற்ற நகரங்களிலும் விளங்கும்.
3.(அ)சபைத்தலைவர்கள் (ஆ)நிதி மற்றும் சட்டஅமைச்சக அலுவலர்களிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 2 உறுப்பினர்கள் (இ)ரிசர்வ் வங்கி அலுவலர்களழிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு உறுப்பினர் (ஈ)மேலும் 2 உறுப்பினர்கள் சபைத்தலைவர்கள் மற்றும் வாரியத்தின் 5 உறுப்பினர்கள் மத்திய அரசால் நியமிக்கப்படுவர். 4.செபின் பொது கணிப்ப வழிகாட்டுதல் **அதிகாரங்கள் :** மேலாண்மை ஆகியவை உறுப்பினர்களிடம் இருக்கும். இவ்உறுப்பினர்கள் அவை வாரியத்தின் எல்லா அதிகாரங்களையும் பெற்று பணிகளை நிரை வேற்றுவோம் 1.வாரியத்தின் சபைத்தலைவரையும் மற்ற உறுப்பினர்களையும் அப்பொறுப்பில் இருந்து நீக்க மத்திய அரசுக்கு அதிகாரம் உண்டு. 2.மத்திய அரசு நிதிஉதவி செய்வதுடன் வாரியத்திற்கு அவ்வபொழுது தேவைப்படும் மானியங்களையும் வழங்குகிறது. 3.செபின் கொள்கைகளையும் திட்டங்களையும் வகுக்கும் பொழுது அவற்றிகான அனைகலை வழங்க மத்திய அரசுக்கு உரிமை உண்டு.வாரிம் தவறுதல் செய்யும் பொழுது அவற்றை விலக்கி சரிசெய்து நடவடிக்கை எடுக்க மத்திய அரசுக்கு அதிகாரம் உண்டு. **பணிகள் :**
1.பங்குமாற்றகங்களின் வியாபாரத்தை ஒழுங்கு படுத்துதல்.
2.இடைத்தரகர்களான பங்கு தரகர்கள் துணைத்தரகர்கள் வெளியிட்டு வங்கியர் ஓப்புறுதியாளர்கள் மற்றும் பத்திர சந்தையுடன் தொடர்புடைய மற்ற இடைத்தரகர்களின் செயல்பாடுகளை பதிவு செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்ததல்
3.பரஸ்பர நிதியங்கள் உள்ளிட்ட முதலீட்டு நிறுவனங்களை பதிவு செய்து ஒழுங்கு படுத்ததல்.
4.சுயகட்டுப்பாடு நிறுவனங்களை தோற்றுவித்தலும் ஒழுங்குபடுத்ததலும்
5.பத்திர சந்தையில் மோசடியான மற்றும் நேர்மையற்ற வணிக நடவடிக்கைகளை தடை செய்தல்
6.முதலீட்டாளர்களிடையே விழிப்புணர்ச்சியை வளர்த்தர் மற்றும் இடைத்தரகர்களுக்கான பயிாச்சியளித்தல்
7.பத்திரங்களுக்கான உள்வணிகத்தை தடைசெய்தல்
8.பங்குகளை கணிசமான அளவில் வாங்கி நிறுமங்களை எடுத்தக்கொள்ளல் போன்ற நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்ததல்
9.பங்குமாற்றகங்களிலிருந்து ஆகியவற்றின் அமைப்பு போன்ற விவரங்கள் பெறுவது பங்கு மற்றகங்களின் பரிசோதனை செய்தல் விசாரணை மற்றும் தணிக்கை செய்தல்
10.மத்திய அரசால் ஒப்படைவு செய்யப்பட்ட பணியிணை செய்தல்

**67அ) நிறுமத்திற்கும் கூட்டாண்மைக்கும் உள்ள வேறுபாடுகள்:**

| எண் | பொருள் | கூட்டாண்மை | கூட்டுப்பங்கு நிறுமம் |
|---|---|---|---|
| 1) | சட்டம் | 1932 | 1956 |
| 2) | பதிவுசெய்தல் | கட்டாயமன்று. | கட்டாயமாக்கப்பட்டுள்ளது |
| 3) | பங்கு மாற்றம் | மாற்றித்தரஇயலாது. | மாற்றக் கூடியவை. |
| 4) | மேலாண்மை | அனைத்துகூட்டாளிகள் | இயக்குனர் அவை |
| 5 | நீடித்தவாழ்வு | நிலையற்றது | நிலையானது |
| 6 | பொறுப்பு | கூட்டு மற்றும் தனி | வரையறு |
| 7 | தணிக்கை | விருப்பம் | சட்டப்படி |
| 8 | எண்ணிக்கை | குறைந்தது 2<br>அதிகம் வங்கி 10<br>பிறதொழில் 20 | தனி 2 பொது 7<br>தனி 50 பொது<br>வரையறையில்லை |
| 9 | உறுப்பினராதல் | தனிநபர் மட்டுமே | நிறுமமே ஒரு<br>நிறுமத்தை வாங்கலாம் |
| 10 | கலைப்பு | எளிது | சட்டப்படி |

**67.ஆ) இயக்குநருக்குரிய அதிகாரங்கள் : 1.பொது அதிகாரம்** :நிறுமம் எச் செயல்களில் ஈடுபட அதிகாரம் பெற்றுள்ளதோ அந்த அனைத்து செயல்பாடுகளிலும் ஈடுபடவும் அவற்றிக்குவேண்டிய அதிகாரங்களை பயன்படுத்தவும் ஒரு நிறுமத்தின் இயக்கநரவைக்கு உரிமை உண்டு.ஆயினும் நிறுமம் எச் செயலையாவது பொது கூட்டத்தில் நிறைவேற்றப்பட தீர்மானத்தின்படிதான் செய்ய வேண்டும்.என்றிருப்பின் அதனை இயக்குநர் தானே செய்யக் கூடாது.**2.சட்டமுறை அதிகாரங்கள்:** அழைப்பு பணத்தை செலுத்துமாறு கோரிட கடனீட்டு பத்திரங்களை வெளியிட கடனீட்டுப் பத்திரம் வெளியிடாமல் வேறுவகையில் கடன் பெற நிறுமத்தின் நிதியினை முதலீடு செய்ய கடன் வழங்க **அதிகாரங்கள்:** இயக்குநர் பதவியில் காலியிடம் இருப்பின் அதனை நிரப்ப செயல்முறை விதிகள் அதிகாரம் வழங்கயிருப்பின் கூடுதல் இயக்குநர்களை நியமித்துக் கொள்ள செயல்முறை விதிகள் அதிகாரம் வழங்கயிருப்பின் மாற்று இயக்குநரை நியமிக்க எந்த ஒரு இயக்குநரோ அவருடைய உறவினரோ தொடர்புற்றிருக்கும் ஒப்பந்தங்கட்கு அனுமதி வழங்க ஆண்டுபொதுகூட்டத்தில் விளம்புவதற்காக பங்காதாய சதவிகிதத்தை குறிப்பிட்டு பரிந்நுரைக்க அதே மேலாண்மையின் கீழ் இயங்கும் நிறுமங்களில் முதலீடு செய்ய நிறுமத்தின் முதலாவது தணிக்கையினரை நியமிக்க தணிக்கையர் பதவியில் எழுந்துள்ள காலியிடத்தை நிரப்ப **கட்டுப்பாடு:** தொழில் முழுவதையும் அல்லது மிகப் பெரும்பான்மையானதை விற்க குத்தைகைக்குவிட (அ)வேறு வகையில் பயன்படுத்த கடனுக்கு திருப்பி செலுத்தும் கால கெடுவை நீடிக்க முன்னரே வழங்கப்பட்ட கடன் தொகையுடன் தற்போது வாங்க உள்ள கடனையும் சேர்த்தால் நிறுமத்தில் செலுத்தப் பெற்ற முதல் தொகையையும் காப்பு தொகையையும் சோத்த தொகைக்கு அதிகமாகயிருப்பினும் தற்பொது திட்டமிட்டுள்ள கடன் பெற குறிப்பிட்ட வரம்பு கடந்த அறக்கொடை வழங்க

**குறிப்பு:** அரசு வழங்கும் விடைக்குறிப்பினை ஒப்பிட்டு பார்த்து மைய மதிப்பீட்டு பணியை மேற்கொள்ளுமாறு ஆசிரியப் பெருமக்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்

www.maduraicommerce.com